(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

10 சைவசமய பாடப்பரீட்சை : 2021

தரம் பத்து



nselva.com

காலம் அளவு	2.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இறைவனைக் குணாதீதர் எனக் கூறும் நூல் எது?
   1. திருப்புகழ் 2. திருவாசகம் 3. திருவிசைப்பா 4) பெரியபுராணம்
2. இறைவனைச் சித்தமும் செல்லாச் சேட்சியன் எனக்கூறியவர் யார்?
   1. மாணிக்கவாகர் 2. சுந்தரர்
   3. திருஞானசம்பந்தர் 4. திருநாவுக்கரசர்
3. அட்டபுஷ்பங்களுள் அடங்காதது எது?
   1. கொல்லாமை 2) உண்மை 3) பொறுமை 4) கல்லாமை
4. "செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே, தவம் செய்தால் எய்த விரும்பியதை எய்தலாம்" என்று கூறியவர் யார்?
   1. விவேகானந்தர் 2) விபுலானந்தர் 3) பாரதியார் 4) திருவள்ளுவர்
5. அமாவாசையை இறுதி நாளாகக் கொண்டு மாதத்தைக் கணிப்பிடும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
   1) அமாந்தமுறை 2) சந்திரமானமுறை
   3) பூர்ணிமாந்தமுறை 4) சௌரமானமுறை
6. பஞ்சாங்கத்தை விளங்கிக் கொள்ளப் பின்வருவனவற்றுள் எவற்றின் அடிப்படை அவசியமாகிறது?
   1) வாரம் பற்றிய அடிப்படை 2) ஆண்டு பற்றிய அடிப்படை
   3) மாதம் பற்றிய அடிப்படை 4) மேற்கூறிய மூன்றும்
7. சனி வழிபாட்டிற்கு ஏற்ற தானியம் எது?
   1) உழுந்து 2) எள்ளு 3) பயறு 4) நெல்
8. பின்வருவனவற்றுள் விரத வகையைச் சேர்ந்தது எது?
   1. தைப்பொங்கல் 2) சித்திரை புத்தாண்டு 3) சிவராத்திரி 4) தீபாவளி
9. விஷ்ணுமூர்த்தி விஷ்ணுபகவானாக அவதரித்த இடம் எது?
   1. துவாரகாபுரி 2) அயோத்தி 3) கிட்கிந்தை 4) ஸ்ரீரங்கம்
10. பூர்வகிரியைகளுள் அடங்காதது எது?
    1. அன்னப்பிராசனம் 2) சிரார்த்தம் 3) திருமணம் 4) வித்தியாரம்பம்

11. இந்துசமயத்தின் பிரிவில் 'சாப்தம்' எனும் நெறியின் முழுமுதற் கடவுள் யார்?
1) கணபதி 2) சிவபெருமான் 3) சக்தி 4) முருகன்

12. நீண்ட ஆயுள், செல்வம், நோய் நீக்கம் வேண்டி ஓதப்படும் மந்திரங்களின் தொகுப்பு எவ் வேதங்களுக்கு உரியது?
1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வணம்

13. திருமுறைகளைப் பாடிய அருளாளர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 4 2) 27 3) 64 4) 12

14. திருநாவுக்கரசர் நடராசப்பெருமானின் அருட்கோலத்தைக் கண்ணுற்ற தலம் எது?
1) திருவீரட்டானம் 2) பிரம்மபுரம்
3) சிதம்பரம் 4) திருவண்ணாமலை

15. சத்தியத்தை மீறியதால் இரண்டு கண்களையும் இழந்த நாயனார் யார்?
1) சுந்தரர் 2) கண்ணப்பர் 3) அப்பூதிஅடிகள் 4) திருநாவுக்கரசர்

16. "பால் நினைந்தூட்டும்....." என்ற பதிகம் பாடப்பெற்ற தலம் யாது?
1) திருப்புன்கூர் 2) தோணிபுரம் 3) திருவாரூர் 4) தில்லை

17. பெரியப்புராணத்தின் மறுபெயர் யாது?
1. திருத்தொண்டர்புராணம் 2. விநாயகர்புராணம்
3. திருவந்தாதி 4. திருவிரட்டை மணிமாலை

18. திருகூட்டச்சிறப்பில் யாருடைய பெருமைகள் விரித்துக் கூறப்பட்டுள்ளது?
1) சிவன் 2) ஆழ்வார்கள் 3) நாயன்மார்கள் 4) சிவனடியார்கள்

19. மருணீக்கியார் என்ற பெயருடைய நாயனார் யார்?
1) மாணிக்கவாசகர் 2) திருநாவுக்கரசர்
3) திருஞான சம்பந்தர் 4) சுந்தரர்

20. ஐந்தொழில்களில் மறைத்தல் தொழிலைக்குறிக்கும் மகோற்சவம் எது?
1) இரதோற்சவம் 2) வாகன திருவிழா 3) கொடியேற்றம் 4) தீர்த்தத் திருவிழா

21. பின்வருவனவற்றுள் அகச்சந்தானக் குரவர் அல்லாதவர் யார்?
1) அருணந்தி சிவாச்சாரியர் 2) சனற்குமார முனிவர்
3) சத்தியஞானதரிசினிகள் 4) பரஞ்சோதி முனிவர்

22. சகலாகம பண்டிதர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர் யார்?
1) பரஞ்சோதி முனிவர் 2) அருணந்தி சிவாச்சாரியர்
3) மறைஞானசம்பந்தர் 4) சனற்குமார முனிவர்

23. திருமந்திரத்தை இயற்றியவர் யார்?
1) அருணகிரிநாதர் 2) மாணிக்கவாசகர்
3) திருமூலர் 4) அபிராமிபட்டர்

24. பிரபோதய சைதன்யர் என்ற நாமத்தோடு சமயத்தொண்டு ஆற்றியவர் யார்?
1) விவேகானந்தர் 2) இராமகிருஷ்ணர்
3) சுவாமி சிவானந்தர் 4) விபுலானந்தர்

25. உலகத்துப் பொருட்களில் அறிவித்தால் அறியும் பொருள் எது?
1) பாசம் 2) பதி 3) பசு 4) சித்து

26. பின்வருவோருள் குருவழிபாட்டில் வீடுபேறு அடைந்தவராகக் கருதப்படாதவர் யார்?
1) திருமூலர் 2) குங்கிலியகலயநாயனார்
3) அப்பூதியடிகள் 4) குலச்சிறையார்

27. பாண்டவர்கள் உறைந்திருந்த இடம் என்று கருதிய இடத்தின் பெயர் எது?

1) பாண்டிருப்பு 2) பண்டாரவிழி 3) பண்ணாகம் 4) பண்டதரிப்பு

28. இந்து மக்கள் மத்தியில் ஆகம முறைப்படியும் ஆகம மரபுக்குப் புறம்பான வழியிலும் வழிபடப்படும் கடவுள் யார்?

1) சண்டேஸ்வரர் 2) விஷ்ணு 3) வைரவர் 4) விநாயகர்

29. திரௌபதி எந்த இதிகாசத்தின் நாயகியாக விளங்குகிறார்?

1) சிலப்பதிகாரம் 2) மகாபாரதம் 3) இராமாயணம் 4) மணிமேகலை

30. "இராவணன் மேலது நீறு" என்று கூறியவர் யார்?

1) சம்பந்தர் 2) அருணகிரிநாதர் 3) திருமூலர் 4) சுந்தரர்

31. ஆவுடையார் சின்னங்கள் எழுத்துக்களுடன் கிடைக்கப்பெற்ற நகரம் எது?

1) யாழ்ப்பாணம் 2) புத்தளம் 3) முள்ளியவல 4) அனுராதபுரம்

32. களுதாவளைப் பிள்ளையார் ஆலயத் தலவிருட்சம் யாது?

1) வில்வமரம் 2) வேப்பமரம் 3) நொச்சிமரம் 5) அரசமரம்

33. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் இறைவியின் பெயர் யாது?

1) மாதுமை அம்பாள் 2) பார்வதி அம்பிகை

3) கௌரி அம்பாள் 4) நகேஸ்வரி அம்பாள்

34. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தத் தினமாக அமைவது

1) ஆடி அமாவாசை 2) புரட்டாதி அமாவாசை

3) ஆனி அமாவாசை 4) ஆவணி அமாவாசை

35. அமுதசுரபி என்ற பெயரிலான அன்னதானமடம் அமைந்த தலம் எது?

1) திருகேதீச்சரம் 2) செல்வசந்நிதி ஆலயம்

3) நயினைநாகபூசணி அம்மன் 4) தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம்

36-38 வரையான கேள்விகளுக்குக் கீழ்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடை தருக?

நாயன்மார்	அற்புதம்	பதிகம்
A) சம்பந்தர்	D) செங்கட்டிகளை பொன்கட்டிகளாக்கியவர்	G) நத்தார் படை
B) திருநாவுக்கரசர்	E) முத்துச்சிவிகை, முத்துகுடை, முத்துச் சின்னம் பெற்றமை	H) பொன்னர் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்
C) சுந்தரர்	F) நீற்றறையில் அடைத்த போது மகிழ்வுடன் இருந்தார்	I) வாழ்க அந்தணர்

36. வன்றொண்டர் என அழைக்கப்படுபவரோடு தொடர்புடைய தொகுதி எது?

1) BFH 2) AEH 3) CDG 4) CEG

37. ஆளுடைய பிள்ளையாருடன் தொடர்புடைய தொகுதி எது?

1) BFH 2) AEI 3) BDG 4) AEG

38. திருத்தாண்டகம் பாடியவரோடு தொடர்புடைய தொகுதி எது?

1) BFH 2) CDH 3) BEH 4) ADI

39. தட்சணாமூர்த்தி என்ற கடவுள் பின்வருவனவற்றுள் எவ்வாறு அழைக்கப்படுவார்?

1) வடமுககடவுள் 2) கீழ்முகக்கடவுள்

3) மேன்முககடவுள் 4) தென்முக கடவுள்

40. சிவபெருமான் யாருக்காகப் பிட்டுக்கு மண் சுமந்தார்?

1) மங்கையற்கரசி 2) திலகவதியார்

3) செம்மணச்செல்வி 4) காரைக்கால் அம்மையார்

(40 புள்ளிகள்**)**

பகுதி - II
எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பின்வரும் இடங்களில் அமைந்துள்ள இந்துசமயக் கடவுளர்களின் பெயர்களைத் தருக?
   1) களுதாவளை 2) நல்லூர் 3) நயினாதீவு 4) புன்னைச்சோலை
2. போண பர்வதத்தில் இராவணன் வழிபாடு செய்தான் என்பதைக் கூறும் புராணம் யாது?
3. சடங்கு என்ற சொல்லின் பொருள் யாது?
4. "அகரவுயிர் போலறிவாகி இயங்கும் நிகரிலிறை நிற்கு நிறைந்து" என்பதன் கருத்து யாது?
5. கடவுளுக்கு இருவகை இலக்கணமுண்டு அவை எவை?
6. விபுலானந்தரின் தாய், தந்தை பெயர் யாது?
7. திருமந்திரத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை எவ்வளவு?
8. கிராமசாந்தி என்றால் என்ன?

(8 x 2 = 16 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. "குனிந்த புருவமும் கொவ்வைச்....."
2. "உற்றுமை சேர்வது மெய்யினையே....."
3. "மீளா அடிமை உமக்கே....."
4. "யாவர்க்குமாம் இறைவற்கு....."
5. "தண்ணளி வெண்குடை .....

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

1. "இன்மையுளின்மை....." 2. "அவ்வித் தழுக்கா....."
3. "அ.ஃகாமை செல்வத்திற் ....." 4. "பல்லார் முனியப் ....."
5. "அற்றார் அழிபசி ....."

(4x1 = 4 புள்ளிகள்**)**

பகுதி - III

பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றுக்கு விடை தருக.

1. "ஒருவர் தன்னோடு தொடர்புடையவர்களிடத்திலே காட்டுகின்ற ஈடுபாடே அன்பு ஆகும்"

அ. மனித விழுமிய பண்புகள் 3 தருக?

ஆ. இறைவன் விலங்குகளிடத்திலும் அன்புகாட்டினார் என்பதை விளக்கும் உதாரணம் ஒன்றைக் குறிப்பிடுக?

இ. ஒருவர் பகை என்று வரும் போது எவ்வாறு நடந்து கொள்வார்?

(8 புள்ளிகள்**)**

2. "இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முக்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்"

அ. விரதம் என்றால் என்ன?

ஆ. பின்வரும் கடவுளர்க்கு நாம் அனுஷ்டிக்கும் விரதம் ஒவ்வொன்று தருக.

1) சனீஸ்வரர் 2) முருகன் 3) விநாயகர்

இ. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் 3 தருக

(8 புள்ளிகள்**)**

3. இந்துசமயத்தின் முதனூலாகப் போற்றப்படுவது வேதங்களும் ஆகமம் ஆகும்.

அ. வேதம் என்பதன் பொருள் யாது?

ஆ. சன்மதங்கள் யாவை?

இ. வேதங்களில் 3 காண்டங்கள் எவை?

(8 புள்ளிகள்**)**

4. சைவசமயத்திற்குத் தொண்டு ஆற்றியதில் திலகவதி அம்மையாரும் ஒருவர்.

அ. திலகவதியாரின் தாய், தந்தை, கணவன் ஆகியோரின் பெயரை முறையே குறிப்பிடுக.

ஆ. தருமசேனரின் சூலை நோய் எவ்வாறு நீங்கியது?

இ. திலகவதியார் எம்மடத்தில் தங்கியிருந்து முத்தி அடைந்தார்?

(8 புள்ளிகள்**)**

5. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

அ. திரௌபதியம்மன் வழிபாடு

ஆ. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

இ. திருமூலர்

ஈ. திருமணச் சடங்கு

உ. குருலிங்க வழிபாடு

(8 புள்ளிகள்**)**